


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

0048

# அன்று ரஷ்யா
# இன்று அமெரிக்கா

தொகுப்பு

A.R.M. Rifkan

M.M.M. Shiyan

M.A.M. Mafasim

M.F.M. Ahsan

| | | |
|---|---|---|
| Name | :- | Anru Rassia Inru America |
| First Edition | :- | 17.10.2001 |
| No. Of Copies | :- | 3000 |
| No. Pages | :- | 29 |
| Printed By | :- | Rifkan Rizvi. |
| Price | :- | 20/= |
| Published | :- | Minnal |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இன்று சர்வதேச ரீதியாக சகலராலும் பேசப்படுகின்ற பிரச்சினையாக அண்மையில் அமெரிக்காவின் மீது நடத்தப்பட்ட தாக்குதலும் இதனைத் தொடர்ந்த நிகழ்வுகளும் காணப்படுகின்றன.

அமெரிக்காவிலுள்ள இரட்டைக் கோபுரங்கள், பெண்டகன் என்பன தாக்கப்பட்டதன் மர்மம் இன்னும் துலங்காத நிலையில் மேலைத் தேய தொடர்பு சாதனங்கள் பல ஊகங்களினடிப்படையில் செய்திகளை வெளியிட்டு வருகின்றன. இந்நிலையில், இது தொடர்பான எமது நிலை எவ்வாறு அமைய வேண்டும். தாக்குதலின் பின்னணி! ஒஸாமாவுக்கும் தாக்குதலுக்குமுள்ள தொடர்பு என்பவற்றை ஆதாரபூர்வமாக அலசும் நோக்கில் இந் நூல் வெளியிடப்படுகின்றது.

இது எமது கன்னி முயற்சியாகும். வாசகர்கள் இம்முயற்சிக்கு உந்து சக்தியாக இருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

குறைகள் எம்மைச் சாரும், நிறைகள் அல்லாஹ்வைச் சாரும்!

*அன்பு ரஷ்யா*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இன்று அமெரிக்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க தாக்குதல்

## ஒருநோக்கு

ஒவ்வொரு நாடும் தனது உள்நாட்டு பிரச்சினைகளை மறநது ஒரு சர்வதேச பிரச்சினையின்பால் ஒரு கணம் தனது கவனத்தை திசைதிருப்பி வைத்த ஒரு வியக்கத் தக்க தாக்குதலே, உலக வர்த்தக நிலையம், பென்டகன் மீதான தாக்குதல்கள், அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் மட்டுமன்றி அதன் எதிரி நாடுகளும் கூட இத்தாக்குதலை அமெரிக்காவின் தன்மானப் பிரச்சினையாகவே கருதியது. ஒஸாமா பின் லாடன் என்கின்ற தனி நபரே இதன் காரண கர்த்தாவாக இருப்பதாக சந்தேகிக்கப்பட்டது. இதனையே அனைத்து தொலை தொடர்பு சாதனங்களும் வலியுருத்தியதோடு முஸ்லிம் சமூகத்தின் பெரும்பாலானோர் இதனை மானசீக ரீதியாக அங்கீகரித்தனர்.

இத்தாக்குதலின் பின்னனிக் காரணம யாது என்றும் அதனை திட்டமிட்டு நடத்திய அமைப்பு எது என்றும் ஆவணரீதியான ஆதாரங்களோடு திட்டவட்டமாக அமெரிக்காவாலே நிறுபிக்க முடியாமல் போனது. சர்வதேச தொலை தொடர்பு சாதனங்களும் கூட இது பற்றி சந்தேகத்துக்கு இடமற்ற தெளிவான கருத்துக்களை வெளியிட இயலாமல் போனது. இத்தாக்குதல் பற்றிய தெளிவான முடிவு இல்லாத இச்சூழ்நிலையிலே இத்தாக்குதல் பற்றிய நோக்கை பல வித்தியாசமான கண்ணோட்டங்களில் தர முனைவதோடு அதனால் சர்வதேச சூழழின் எதிர்காலத் தன்மையையும் விளக்க முயல்கிறேன்.

இத்தாக்குதலுக்கு முன்னிருந்த சர்வதேச நிகழ்வுகளையும் பின்னால் நிகழ்கின்ற நடவடிக்கைகளையும், வரலாற்று தொடர்புகளையும் ஒன்றோடொன்று தொடர்பு படுத்தி, ஊகித்தல், காரணாகாரிய முறை காணல் போன்ற ஆய்வுக் கருத்துக்களை மையமாக வைத்து இத்தாக்குதலுக்கு உடன்பாடான பலவித எண்ணக் கருக்களை உருவாக்கிவிடலாமென எண்ணுகிறேன்.

### இத்தாக்குதல் நியாயமானதா ?

உலக வர்த்தக நிலையம், பென்டகன் மீதான தாக்குதல்களினால் வெறும் அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்பட்டதையும், உலகப் பொருளாதாரத்தை ஆட்டம் காண வைத்ததையும் மையமாக வைத்து பார்க்கின்ற போது இத்தாக்குதல் நியாயமற்ற காட்டு மிறாண்டித் தனம் என்றே கருத வேண்டும். இதனாலே உலக நாடுகள் அனைத்தும் இதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டன நோக்கோடே பார்த்தன. மனிதாபிமான மனங்கொண்ட அனைவருக்கும் சகிக்க முடியாமல் போனது. ஆனால் இத்தாக்குதல் வரலாற்று தொடர்பில் நிகழ்ந்த போராட்டங்களின் ஒரு நிகழ்வு என நோக்கும் போது இத்தாக்குதல் அப்போராட்டத்துக்கமைய நியாயப்படுத்த முடியுமா என எண்ணத் தோன்றுகிறது.

யூதர்களின் கைப்பிடியில் இருககும் அமெரிக்கா அவர்களின் இலக்குகளை அடைவதற்கான பல்வேறுபட்ட அநியாயங்களையும் பகிரங்கமாகவும், மறைமுகமாகவும் திட்டமிட்ட ரீதியிலும் வரலாறு நெடுகிலும் முஸ்லிம் சமூகம் என்ற இஸ்லாமிய சக்திக்கெதிராய் நடாத்தி வந்தது. அமெரிக்காவின் இராணுவப் பலம், சர்வதேச சமூகத்தில் உள்ள அரசியல் பலம், பொருளாதார பலம் போன்ற மூன்று காரணிகளையும் ஆயுதமாக கொண்டு முஸ்லிம் சமூகத்தை அதாவது இஸ்லாமிய சக்தியை ஆக்கிரமித்து வந்தது. இவ்வாக்கிரமிப்பு நடவடிக்கைகளில் பலலெச்சம் முஸ்லிம் அப்பாவிகள் கொல்லப்பட்டதோடு பலஸ்தீனத்தில் இன்னும் கொல்லப்படுகின்றனர். அமெரிக்காவின் பிரகடனப்படுத்தப்படாத வரலாற்று ரீதியான இப்போராட்டத்தின் ஒரு நிகழ்வாக இதை கொள்ளும் போது அமெரிக்காவில் கொல்லப்பட்ட பல லெச்சக்கணக்கான மக்களோடு இதை ஒப்பீடும் போது இது மிகச் சொற்பமே.

உலகின் பொருளாதாரத்தின் அரைப் பங்கை அனுபவிககும் அமெரிக்கா, இவ்வளத்தை ஏனைய நாடுகளிடமிருந்து சுரண்டியே பெருகிறது. அத்தோடு தனது அரசியல் சர்வதேச பலத்தை கொண்டும் சர்வதேச சமூகத்தின் பலத்தைக் கொண்டும் பல வழிகளில் ஏனைய நாடுகளை நுணுக்கமான திட்டமிடலின் மூலம் சர்வதேச சமூகத்தின் விமர்சனத்தை பெறாத வகையில் ஆக்கிரமிப்பை மேற்கொள்கிறது. இவ்வாறான மும்முனைகளளான அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு சாதாரன பாமர மக்கள் உணரா விட்டாலும் அறிவு சமூகம் அதை அறிந்தே இருக்கின்றது. கீழேத்தேய நாடுகளை விட அதிஉயர் அறிவாளிகளென தம்மை இனம் காட்டும் அமெரிக்க மக்கள் இவ்வாக்கிரமிப்பு முறையை நன்கு அறிந்தேயிருப்பர். இதனை ஏன் அமெரிக்க பொது மக்கள் கண்டு கொள்ளவில்லை? காரணம் தான் என்ன? இவ்வாக்கிரமிப்புக்கு எதிராய் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடவில்லை? ஆகவே இச்சமூகத்தின் மீது தொடுத்த இத்தாக்குதல் நியாயமானதா என எண்ணத் தோன்றுகிறது. மேலே விளக்கப்பட்ட அமெரிக்காவின் மும்முனை ஆக்கிரமிப்புத் தன்மை அமெரிக்காவிடம் இருக்கிறது என்பதை அதனது மாறா வெளிநாட்டுக் கொள்கை காட்டித் தருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இத்தாக்குதலில் இஸ்லாமிய சக்தியின் கரம் இருக்குமா ?

சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்கு பின் அமெரிக்கா வல்லரசுக்கு எதிரான ஒரு சக்தியாக இஸ்லாம் கருதப்பட்டது. பல்வேறு இட அமைவுக் கூறுகளாகவும் வித்தியாசமான தலைமைகளை கொண்டதாகவும் சிதறடிக்கப்பட்ட முஸ்லிம் சமூகம் பலமிழந்து போனது. அன்மைக்காலமாக முஸ்லிம்கள் வாழும் பிரதேசங்கள் அனைத்திலும் வித்தியாசமான இயக்கப் பெயர்களில் இஸ்லாமிய எழுச்சிப் போராட்டங்கள் நிகழ்கின்றன. இவைகளுக்கிடையிலான வலைப்பின்னல் தொடர்பானது பலப்படுத்தப்படுவதால் இஸ்லாம் எதிர்கால வல்லரசுச் சக்தியாக பரிணமித்து வருகிறது. ஆகையால் அமெரிக்க வல்லரசின் பொருளாதார பலத்தை இழக்கச் செய்வதற்கான ஒரு தாக்குதலாக அமைந்திருக்குமோ எனவும் எண்ணத்தோன்றுகிறது. இன்னும் ஒஸாமா பின் லேடன் என்ற தனித் தலைமையின் பரந்து விரிந்த ஒரு சூழ்ச்சியைக் கொண்ட அமெரிக்காவை விழவைப்பதற்கான ஒரு சூழ்ச்சியின் ஆரம்பமாகவும் இருக்கலாம். இது வெறும் ஊகமல்ல, மாறாக இக்கருத்து பின்வரும் சமகால நடைமுறைகளுக்கேற்ப பெற்றுக் கொண்டதாகும்.

அதாவது தகர்க்க முடியா கோட்டை என கருதப்படும் ஆப்கானில் ஒஸாமா தன்னை ஸ்திரப்படுத்திக் கொண்ட நிலையில் இத்தாக்குதல் நடத்தப்பட்டது. அடுத்து ஒஸாமாவை அமெரிக்காவிடம் ஒப்படைப்பதற்கு பகிரங்கமாகவே ஆப்கான் மறுக்கின்றது. இக் காரணங்களை கொண்டு அமெரிக்கா ஆப்கானில் போர் தொடுப்பதை அவர்கள் எதிர்பார்த்து நிற்பர். அவ்வாறு போர் தொடுக்கும் போது அமெரிக்கா பொருளாதார , இராணுவ இலக்குகள் மீது தற்கொலை தாக்குதல் நடத்தி அமெரிக்காவின் பொருளாதாரத்தை நசிப்பதோடு அமெரிக்க மக்களின் உள்ளங்களில் அமைதியின்மையை ஏற்படுத்தி அமெரிக்காவை பின்னடையச் செய்யும் நோக்கமாகவும் இருக்கலாம். இப்போராட்டத்திலே அமெரிக்க பல சேதங்களை காணும் போது அந்நாட்டு மக்களின் நிர்ப்பந்த போராட்டங்களுக்கேற்ப அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கையை மாற்றமுறச் செய்யும் ஒரு சூழ்ச்சியாகவும் இருக்கலாம்.

அப்பாவிப் பொது மக்கள் பொது உடமைகள் அழிக்கப்படுதை இஸ்லாமிய போராட்ட ஒழுங்கு ஒத்துக் கொள்வதில்லை. ஆகவே இஸ்லாமிய போராட்ட இயக்கங்கள் இதைச் செய்யச் சாத்தியமில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது. என்றாலும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அன்று ஜாஹிலியாவுக்குஎதிராக இராணுவப் போராட்டம் நடாத்திய சூழ்நிலையும் இன்று முஸ்லிம் சமூகம் நடாத்த வேண்டி இருக்கின்ற இராணுவப்போராட்ட சூழ்நிலையும் வித்தியாசமானது.

அன்று ரஷ்யா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று முஸ்லிம்களின் எதிரிகளோடு ஒப்பீடும் போது ஆயுதப் பலத்தின் ஓரளவேனும் நிறைவுடையவர்களாகவும்,அதிஉயர் ஈமானியப் பலத்தோடு ஒரு போர் தலைமையின் கீழ் ஒன்று திரண்டவர்களாகவும், நேருக்கு நேர் போராடும் மரபு வழிப் போராட்ட முறையை உடையதாகவுமே காணப்பட்டது. ஆனால் இன்றோ ஆயுதப் பலத்தையும் , பொருளாதார பலத்தையும் முஸ்லிம்களுக்கும் அவர்களது எதிரிகளுக்கும் இடையில் ஒப்பீடும் போது அன்றைய எதிரிக்கும் முஸ்லிம்களுக்குமிருந்த ஆயுதப் பல வேறுபாட்டோடு ஒப்பீடும் போது மிக மிக பலவீனமானதாகும்.அத்தோடு முஸ்லிம் சமூகம் வித்தியாசமான பல தலைமைகளை கொண்டு ஈமானிலும் பலமிழந்து காணப்படுகிறது. இன்நிலையில் இன்றைய ஜாஹிலியா சக்திக்கெதிரான போராட்ட வடிவம் தான் என்ன? எனவே அன்றைய இஸ்லாமியப் போராட்ட ஒழுங்கிலிருந்து ஆதாரங்களையும், போர் விதிமுறைகளையும் கருத்திற் கொண்டு இன்றைய போராட்டம் நிகழ்த்தப்படுவது சாத்தியமா?ஒரு முறை சிந்திக்க வேண்டும். எனவே இவ்வகையான தாக்குதல் போராட்டங்கள் நடாத்தப்படுவதை இச்சிந்தனையின் கீழ் அனுமதிக்கலாமா?

## முஸ்லிம்கள் செய்வதற்கு வாய்ப்பே இல்லை

இந்தளவுக்கு கொடுரமான தாக்குதலை எந்த நிலையிலும் எந்தவொரு முஸ்லிமும் செய்ய மாட்டார். குர்ஆன் மற்றும் நபி வழி நடக்கும் எந்த முஸ்லிமுக்கும் மனித உயிருக்கும் இஸ்லாம் அழிக்கின்ற முக்கியத்துவம் தெரியும். ஒரு மனிதனை கொல்வது மனித குலத்தையே கொல்வதற்கு ஒப்பாகும், என்று சொல்வது தான் இஸ்லாம். போர்க்கலத்தில் கூட நிராயுதபாணி, அப்பாவி மக்களை தாக்காதீர்கள் என்று சொல்வது தான் இஸ்லாம்.

இந்த வகையில் எந்தவொரு இஸ்லாமியக் குழுவும் WTC-மீது தாக்குதல் தொடுக்க எந்தவொரு நியாயமும் இல்லை. WTC-இல் இருந்தவர்களும் சரி, கடத்தப்பட்ட விமானத்தில் இருந்த விமானிகளும் சரி நிராயுத பாணிகளே. அப்பாவிகளே.

இந்நத் தாக்குதலால் முஸ்லிம்களுக்கு எந்தவொரு பயனும் கிட்டாது என்பது வெளிப்படை. இன்னும் சொல்லப்போனால் நஷடங்களும், தீமைகளும் தான் அதிகம். முதலாவதாக WTC-இல் பணியாற்றும் 5000 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர், இரண்டாவதாக இஸ்லாம், மற்றும் முஸ்லிம்கள் மீது அவதூறுப் பிரச்சாரம் முடுக்கி வீடுவதற்கு இந்தக் குற்றம் வழி வகுக்கும்.மக்களின் கோபத்திற்கும், வெறுப்புக்கும் முஸ்லிம்கள் ஆளாவர். எந்தவொரு முஸ்லிமும் இஸ்லாத்தை அமைதியான மார்ககமாக பார்க்கப்படுவதை தான் விரும்புவாரே தவிர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறுப்பின் மார்க்கமாக பார்க்கப்படுவதை விரும்பமாட்டார். மூன்றாவதாக, இந்தக் குற்றத்தினால் அமெரிக்காவில் முஸ்லிம்களின் உயிர் உடமைக்கு அச்சுருத்தல் ஏற்படும். முஸ்லிம்களின் வர்த்தகம்,சொத்து, நிறுவனங்கள், வழிபாட்டுத்தளங்கள் மீது தாக்குதல் நடத்த வெறி பிடித்த கூட்டம் வாய்ப்புக்காக ஏங்கி நிற்கிறதே...!

## உஸாமாவால் செய்திருக்க முடியுமா ?

அரேபியாவில் அமெரிக்க படைக்கு இடமளித்ததை தான் அவர் எதிர்க்கிறார். அமெரிக்காவில் அமெரிக்கா மீது எந்தவொரு தாக்குதல் தொடுக்கப்பட்டாலும் அது அமெரிக்க முஸ்லிம்களுக்கு பெரும் தொல்லை கொடுப்பதாக அமையும் என்பதையும் அவர் உணர்ந்திருக்கிறார். இன்னும் சொல்லப் போனால் ஏற்கனவே சொன்னது போல தொடுக்கப்பட்ட தாக்குதல் சாதாரணமானது ஒன்றல்ல. அந்தளவுக்கு பெரிய தாக்குதலை நடாத்துவதற்கு தேவையான ஆள்பலமோ, திறமைகளோ, ஆற்றல்களோ, பணபலமோ, எல்லாவற்றுக்கும் மேலாவாக 'உள்' ஆற்களின் ஒத்துழைப்போ உஸாமா உற்பட தாலிபான்கள், ஹமாஸ் போன்ற எந்தக் குழுவிடமும் இல்லை.

## இஸ்ரேலிடம் இவையெல்லாம் இருக்கிறது.

இஸ்ரேல்தான் இந்தப் பயங்கரவாதத்தை நடாத்தியிருக்கும் என்பதற்கு ஏராளமன காரணங்களை பட்டியலிட முடியும.

முதலாவதாக, இத்தைகைய மாபெரும் தாக்குதலை நடத்துவதற்கு தேவைப்படும் அத்தனையும் – பணம், ஆள்பளம், ஆற்றல், திறமை, விஷய ஞானம், உள் ஆட்களின் ஒத்துழைப்புஎல்லாமே இஸ்ரேலிடம் உண்டு.

இரண்டாவதாக சமீப காலமாக அமெரிக்க அரசியல் சூழலில் ஏற்பட்டுள்ள அதிரடி மாற்றங்கள். அமெரிக்க அரசியல் ஸியோனிஸ்டுகளும், இஸ்ரேலியர்களை ஆதிக்கம் செலுத்திய காலம் மலையேறி விட்டது. அமெரிக்க மக்கள் கருத்து கூட இஸ்ரேலுக்கு மாறி வரும் நிலை. எல்லாவற்றுக்கும் மேலாக அமெரிக்க அரசியலில் மதிக்கப்படும் சக்தியாக முஸ்லிம்களும் வளர்ந்து வருவது யூதர்களுக்கு பெரும் அச்சுருத்தலாக உள்ளது.

சென்ற வருட அதிபர் தேர்தலில் யூதர்கள் அல்கோருக்கு பெரும் ஆதரவு தந்தனர். முஸ்லிம்களோ புஷ் பின்னால் திரன்டனர். கோரின் தோல்வியை விட புஷ்ஷின் வெற்றி யூதர்களை புண்படுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவதாக அமெரிக்காவில் இஸ்லாம் மிக வேகமாக பரவி வருவதை யூதர்களுக்கு ஜீரணிக்க முடிய வில்லை. முஸ்லிம்களின் அதிகரிப்பே யூதர்களை எரிச்சலடைய வைப்பதாக உள்ளது. முஸ்லிம்கள் அரசியலில் ஆதிக்கம் பெறுவதும், பொருளாதார ரீதியாக வளர்வதும் தொடர்ந்தால் இஸ்ரேலுக்கு அமெரிக்கா அளித்து வரும் அரசியல், பொருளாதாரம், இராணுவ உதவிகள் நின்று விடும் என யூதர்கள் அஞ்ஞினர்.

இஸ்லாத்தை பயங்கரவாதத்தோடு சேர்த்து சொல்வதாலும், முஸ்லிம்கள் பயங்கரவாதிகள் என்ற உணர்வை ஏற்படுத்துவதன் மூலமும் அமெரிக்காவில் முஸ்லிம்களின் வளர்ச்சியை தடுத்து விட முடியும் என யூதர்கள் கணக்குப் போட்டிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் இஸ்ரேல் இராணுவம் முஹம்மத் அல் துர்ரா என்கின்ற 12 வயது சிறுவனையும் அவனது தகப்பனையும் கதரக்கதர சுட்டுக் கொன்ற காட்சிகயை தொலைக் காட்சியில் பார்த்தவர்கள் மத்தியில் இஸ்ரேல் இராணுவத்தின் குறித்த பயங்கரவாதமான உணர்வு அழுத்தமாக படிந்து விட்டது. அதற்கு பிறகு தொடர்ந்து பலஸ்தீன கைக்குழந்தைகளும், சிறுவர்களும் கொல்லப்பட்டதும் அவை தொலைக் காட்சியில் ஒளிபரப்பானதும் இஸ்ரேலின் முக முடியை கிழிப்பதாக அமைந்தது. பலஸ்தீன நிராயுத பாணிகள் மீதான இஸ்ரேல் இராணுவத்தின் கொடுமைகள் காரணமாக அமெரிக்காவில் மக்கள் கருத்து இஸ்ரேல் ஆதரவு நிலையிலிருந்து மிக வேகமாக இஸ்ரேல் எதிர்ப்பு நிலைக்கு மாறியது. இந்த நிலையில் மக்கள் கருத்தை மாற்றியமைக்க ஏதாவது மிகப் பெரிய அளவில் செய்து பழியை முஸ்லிம்கள் மீது போட வேண்டிய நிர்ப்பந்தம் யூதர்களுக்கு இருந்தது.

அமெரிக்காவில் பயங்கரவாதத்தை நிகழ்த்தி அதனை முஸ்லிம்கள மீது போடுவது இஸ்ரேலுக்கு புதிதல்ல. சில வருடங்களுக்கு முன்பு ஒக்லஹோமா நகரில் F.B.I கட்டடம் தகர்க்கப்பட்டதும் பள்ளிக் குழந்தைகள் பழியான போது பழியை முஸ்லிம்கள் மீது போட தீவிரமான அவதூருப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் கொலையாளிகள் கொண்டு வந்த ட்ரக்கின் நம்பர் பிலேட்டை கொண்டு உண்மைக் குற்றவாளிகளை அமெரிக்க பொலிஸ் பிடித்த பிறகு முஸ்லிம்கள் மீதான பழி அகன்றது. தீமோத்தி மெக்வே என்கிற முன்னால் இராணுவ வீரரை யூதர்கள் பயன்படுத்தி இருந்தனர். 02 மாதங்களுக்கு முன்பு தான் இந்த பயங்கரவாதிக்கு விச ஊசி போடப்பட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது,

ஆனால் 1993 – இல் இதே WTC கட்டிடத்தில் நிகழ்ந்த குண்டு வெடிப்பில் முஸ்லிம்கள் மீது பழி போடுவதில் யூதர்கள் வெற்றி பெற்றனர். இந்தக் குண்டு வெடிப்பு காரணமாக 1996 இல் அமெரிக்காகுடியிருப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் ரகசிய சான்றுச் சட்டங்களில் திருத்தங்கள் செய்யப்பட்டன.

இங்கு இன்னொரு விசயமும் கவனிக்க வேண்டும். அமெரிக்க பாதுகாப்பு மையமான பெண்டகன் கட்டடம் மீது விமானத்தைக கொண்டு தாக்கியிருக்கின்றனர். இதனால் 800 க்கும் அதிகமான மிகவும் திறமை வாய்ந்த அமெரிக்க இராணுவ நிபுணர்கள் இறந்திருக்கின்றார்கள்.

பென்டகன் கட்டடம் உலகிலே மிக பாதுகாப்பான கட்டடமாகும். இதனை நோக்கி ஒரு காக்கா, குருவி வந்தாலும் ராடாரில் தெரியும். அதுமட்டுமல்ல எதிரி விமானமோ ஏவுகணையோ அதனை நோக்கி வந்தால் உடனே அவற்றை வானிலே தடுத்து வீழ்த்தும் அளவுக்கு அங்கு தானியங்கி ஏற்பாடுகள் இருந்தன. இப்படிப்பட்ட ஏற்பாடுகளையும் மீறி விமானத்தை கொண்டு செல்ல முடிந்திருக்கிறது எனில் அது நிச்சயமாக உள் ஆட்களின் ஒத்துழைப்போடுதான் சாத்தியமாகும். இஸ்ரேல் மட்டுமே இத்தகைய ஊடுருவல்களையும் தோழமை புள்ளிகளையும் கொண்டிருக்கிறது.

ஒரே நேரத்தில் மூன்று விமானங்களைக் கொண்டு அடுத்தடுத்து இரண்டு மணி நேரத்துக்குள் மூன்று இலக்குகளை தாக்குவதற்கு மிக மிக உயர்ந்த திட்டமிடலும்ஒருங்கிணைப்பும் தேவைப்படும். வெளியே எவருக்கும் தகவல் கசியாத அளவுக்கு ரகசிய காப்பும் தேவைப்படும். இதெல்லாம் யூதர்களால் மட்டுமே சாத்தியமாகும்.

## சந்தர்ப்பத்தை பயன்படுத்தும் அமெரிக்கா

சர்வதேச ரீதியாக பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற போர்வையில் சகல நாடுகளினதும் அனுமதியைப் பெற்று எவ்விமர்சனமும் இன்றி போராடும் ஓர் சர்வதேச கதாநாயகனாககாட்டிக் கொள்ள முயல்கிறது அமெரிக்கா. இன்னும், எதிர்ப்புக்கள் வராத வகையில் போர்ப் பயிற்சியில் ஈடுபடவும், ஆயுதக் கண்டுபிடிப்பை மேற்கொள்வதற்கு ஓர் காரணமாக இதை பயன்படுத்திக்கொள்ளும். தனது இராணுவ ஆதிக்கத்தை தென் ஆசியாவிலும் மற்றும் தனக்கு விருப்பமான பிரதேசங்களிலும் நிலைநிருத்துவதற்கு இதனை ஓர் சாக்குப் போக்காக எடுத்துக் கையாலும்.அரபுக் கடலில் தனது இராணுவ தளபாடங்களை நகர்த்துவதற்கு இதனை ஓர் வழிமுறையாக கொள்ளும். தனது CIAஉளவாளிகளை சகல நாடுகளுக்கும் உத்தியோக பூர்வமாக அனுப்பி வைப்பதற்கு சந்தர்ப்பமாக பயன்படுத்தும். இதனால் CIA யின் உளவுப் பலம் அதிகரிக்கும். அமெரிக்காவில் முஸ்லிம்களின் சனத்தொகை அதிகரித்து வருவதால் இஸ்லாத்தை வெறுக்கச் செய்வதற்காக அம்மக்கள் மத்தியில் ஒரு பிரச்சாரமாக பயன்படுத்திக் கொள்ளும். ஆப்கானின் கடுமையான இஸ்லாமியப் போக்கின் எதிரானவற்றை அடிக்கடி தொலைத் தொடர்பாடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனங்களுக்கூடாய் எடுத்து காட்டுவதன் மூலம் வெள்ளை இன மக்களின் இஸ்லாமிய வெறுப்பை அதிகரிக்கச் செய்யும். பின் லேடனின் சகாக்களின் நிதி நிறுவனங்களை முடக்குதல் என்ற போர்வையில் இஸ்லாமிய இயக்கங்களின் பொருளாதார நலன்களை பகிரங்கமாகவே முடக்க வழிபார்க்கும். இதனால் இஸ்லாமிய சக்திகளின் பொருளாதார சக்திகளை கொன்றுவிடும். இவ்வாறு சர்வதேச விமர்சனத்துக்குட்பட வேண்டிய அமெரிக்காவின் நடத்தைகளை சர்வதேச அனுமதியையும், மௌனத்தையும் பெற்றுக்கொள்வதற்கான உத்தியோக இந்நிகழ்வை கைக்கொள்ளும்.

மனிதாபிமானத்துக்கெதிரானதென்ற வகையில் இத்தாக்குதலை நியாயப்படுத்த முடியாது என்றாலும் அமெரிக்காவின் வரலாற்று ரீதியான பிரகடனப்படுத்தப் படாத போரின் ஒரு விளைவாய் இதைக் கொள்ளும் போது போராட்ட ஒழுங்குக்கு ஏற்ப இதை நியாயப்படுத்த முடியும் போலும். தற்கால அமெரிக்க வல்லரசுக்கும், எதிர்கால இஸ்லாமிய சக்திகளுக்கும் இடையே ஒரு போராட்டம் நிகழ்வதால் இது இஸ்லாமிய சக்தியின் போராட்ட ஒழுங்கின் ஒரு பிரதிபலிப்பாக இருக்கலாம். யூத சாம்ராஜ்யத்தின் கனவை தவிடு பொடியாக்கும் சமூக சூழ்நிலை காணப்படுவதால் அதற்கெதிரான ஒரு சூழ்நிலையை உருவாக்க யூதர்களின் திட்டவட்டமாகவும் இது இருக்கலாம்.

எவ்வாறிருந்த போதிலும் இச்சந்தர்ப்பத்தை அமெரிக்கா தன் நலத்திற்கு பயன்படுத்திக் கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை. இச்சந்தர்ப்பவாதத்தை அமெரிக்கா கையாளும் விதத்துக்கு ஏற்பவே நாளைய சர்வதேச சூழலின் தன்மை காணப்படும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க தாக்குதல் குறித்து
## கலாநிதி யூஸுப் அல் கர்ளாவி

அமெரிக்காவில் இடம்பெற்ற பொது மக்களுக்கு எதிரான தாக்குதலை பிரபல இஸ்லாமிய அறிஞரான யூஸுப் அல்கர்ளாவி அவர்கள் கண்டித்துள்ளதோடு இரத்ததானம் செய்யும் படி அங்குள்ள முஸ்லிம்களை வேண்டியுள்ளார்.

இராணுவ, அரசியல் பொருளாதார முனைகளின் இஸ்ரேல் மீதான அமெரிக்காவின் தவறான கொள்கையை நாம் எதிர்த்தாலும் கூட இக்கொடுரச் செயலை கண்டு எங்கள் உள்ளங்கள் இரத்தக் கண்ணீர் சிந்துகின்றன. சகிப்புத் தன்மையுடைய இஸ்லாம் மார்க்கம் மனித உயிரை மிகையாக மதிக்கிறது. அப்பாவி பொது மக்கள் மீதான தாக்குதலை பெரும் பாவமாக கருதுகிறது. அல்குர்ஆன் கூறுகிறது.

*"எவனொருவன் மற்றொரு ஆத்மாவை கொலைக்குப் பிரதியாகவோ அல்லது பூமியில் குழப்பத்தை தடை செய்வதற்காகவோ (அநியாயமாக) கொலை செய்கிறானோ அவன் மனிதர்கள் யாவரையுமே கொலை செய்தவன் போலாவான்"* (அல் மாயிதா : 32)

*"மற்றொரு மனிதனை சட்ட விரோதமாக கொலை செயயாதவரை ஒரு மு.்.மின் தனது மார்க்க வரம்புக்குள்ளே இருக்கிறான்"* என முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

தீயவர்களோடு சேர்த்து அப்பாவிகளைக் கொலை செய்வது இஸ்லாத்தில் தடை செய்யப்பட்டுள்ளது. யுத்தங்களில் கூட முஸ்லிம்கள் தம்மை நேருக்கு நேர் தாக்க வருபவர்களை கொல்வதற்காகவே அனுமதிக்கப்பட்டுள்ளது. அன்றி, பெண்களையோ, வயது முதிர்ந்தவர்களையோ, குழந்தைகளையோ, மதத் தலைவர்களையோ கொல்வதற்கு அனுமதி இல்லை. எனவே தான் தீர்மானங்கள் எடுப்பதில் எவ்விதத்திலும் சம்பந்தப்படாத, தம் அன்றாட தேவைகளுக்காக அலைந்து உழைக்கும் அப்பாவி பொது மக்கள் அமெரிக்காவில் கொல்லப்பட்டதை இஸ்லாம் ஒரு மாபெரும் குற்றமாக கருதுகிறது.

*"ஒரு பூனையை அடைத்து வைத்ததற்காக ஒரு பெண் நரகத்தை அடைவாள"* என நபியவர்கள் நவின்றுள்ளார்கள். மிருகத்தை பாதுகாப்பதற்கே இவ்வளவு கவனம் எடுக்கப்பட்டிருப்பின் இறைவனின் பிரதிநிதிகளான மனித உயிரை பறிப்பதற்கெதிராக எவ்வளவு பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டிருக்கும ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித உயிர்கள் மீது தாக்குதல் காரணமாக பாரிய பாதிப்புகளுக்கு உள்ளானவர்கள் அரபி முஸ்லிம்களாகிய நாம் தான், யூத ஆக்கிரமிப்பாளர்கள் அப்பாவி பலஸ்தீனர்களின் வீடுகளைத் தரைமட்டமாக்கி, அவர்களது விவசாய நிலங்களைத் தீயிட்டுக் கொளுத்தி பச்சை பச்சையாக அவர்களை கொன்று குவித்து, அநாதைக் குழந்தைகளை அவளமாக்கி விட்டுள்ள அனுபவத்தின் அவதிகளில் நாம் பங்குகொள்கிறோம். பலஸ்தீனர்களின் அன்றாட வாழ்க்கையே நிரந்தர கூட்டங்களாக மாறிவிட்டன, பலஸ்தீனர்கள் இவ்வாறு அநீதியான ஆக்கிரமிப்பை எதிர்நோக்கியுள்ள போது இரத்தத்தை ஓட்டுவதையும், அழிவையும் நிச்சயம் அவர்கள் எதிர்ப்பார்களே ஒழிய, அப்பாவிப் பொது மக்களைக் கொன்று குவிக்கப்போவதில்லை. உதவியற்ற அப்பாவிப் பொது மக்களைக் கொல்வதை இஸ்லாம் அனுமதிக்கவில்லை. அவ்வாறான தாக்குதலை உண்மையான முஸ்லிம்கள் செய்வார்கள் என்பதை நான் திட்ட வட்டமாக மறுக்கிறேன்.

சில பொய்த் தகவல்கள் கூறுவது போல முஸ்லிம்கள் இவ்வாறான தாக்குதல்களை மேற்கொள்கிறார்கள் எனில், மார்க்கத்தின் பெயரால் நாம் அந்தக் குற்றவாளிகளின், அநியாயக் காரர்களின் செயல்களை நிராகரிக்கிறோம். அப்படியான ஆக்கிரமிப்பாளர்கள், எந்த மார்க்கத்தினராயினும், சாதியினர்களாயினும் தண்டிக்கப் பட வேண்டியவர்களே. ஆனால் ஒரு சில மனிதர்களின் குற்றச் செயல் காரணமாக ஒரு முழு நாடோ, அல்லது ஒரு மதம் வன்முறைகளையும் பயங்கரவாதத்தையும் தூண்டுகிறது எனக் கூறி குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருப்பதையும் நாம் எதிர்க்கிறோம்; எச்சரிக்கிறோம்.

ஒரு கிறிஸ்தவ அமெரிக்கன் ஒக்லஹோமாவில் இடம்பெற்ற பிரசித்தமான கட்டடத் தகர்ப்பை மேற்கொண்டான் என்பதற்காக கிறிஸ்தவ மதமோ, அமெரிக்காவோ அல்லது கிறிஸ்தவ உலகமோ சாட்டப்பட வில்லை என்பதை கலாநிதி யூஸுப் அல் கர்ளாவி தெளிவுபடுத்தியுள்ளார்.

பலஸ்தீன பூமிக்கு வெளியே இடம்பெறும் தாக்குதல்கள் தொடர்பாக என்னிடம் பலர் TV நிகழ்ச்சிகளின் போதும் கேட்கிறார்கள், நான் அவர்களுக்கு கூறுவேன் "பலஸ்தீன பூமிக்கு வெளியே இவ்வாறான நிகழ்வுகள் நடப்பதற்கு நான் அனுமதியளிக்கமாட்டேன்; இதற்கு பதிலாக எமது பூமியை ஆக்கிரமித்துள்ள எதிரியை நேரடியாக எதிர் கொள்வதிலேயே நாம் கவனம் செலுத்த வேண்டும்." இதனையே அல்குர்ஆனும் கூறி நிற்கிறது.

"அல்லாஹ்வின் பாதையில் உங்களுக்கு எதிராக போரிடுபவர்களுடன் நீங்களும் போரிடுங்கள். ஆனால் நீங்கள் வரம்பு கடந்துவிட வேண்டாம். நிச்சயமாக அல்லாஹ், அத்துமீறுபவர்களை விரும்புவதில்லை." (2:189)

நன்றி :- அல் ஹஸனாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒஸாமாவின் வரலாற்றுப் பின்னனி

உலக வர்த்தக மையம் மற்றும் பென்டகன் மீது நடாத்திய தாக்குதலின் பின்னர் அனேகமாக மக்கள் ஒவ்வொருவரும் ஒஸாமா பின் லாதனின் பெயரை கேள்விப்பட்டுள்ளார்கள்.

இந்த தீவிரவாத தாக்குதலின் முக்கிய சந்தேக நபராக 1993ஆம் ஆண்டில் இடம் பெற்ற உலக வர்த்தக மையம் மீதான தாக்குதல், அமெரிக்க தூதுவர் ஆலயம், கப்பல்கள் மற்றும் பல உடைமைகள் மீதான தாக்குதல் போன்ற எண்ணற்ற தீவிரவாதச் செயல்களுக்கு உரிமை கோரப்பட்ட ஒஸாமா பின் லாதினே இதற்கும் முக்கிய காரண கர்த்தாவாக இருக்கலாம் என அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் தெரிவித்துள்ளார்.

மெலிந்த ஆனால் திடமான உடலையும் நீண்ட தாடியுடனுமான இஸ்லாமிய பாரம்பரிய உடையணிந்த ஒருவர் தொலைபண்ணியில் பேசிக் கொண்டிருப்பதனையும் மலைகளில் உள்ள கூடாரங்கள் அவரை சூழ வர போராயுதங்கள் ஏந்திய வன்னம் நின்று கொண்டிருக்கும் மனிதர்கள், இவற்றுக்கிடையே அவர் நடமாடிக்கொண்டிருப்பதையும் அன்றாடம் தொலைக்காட்சி பார்ப்பவர்கள் கண்டிருக்கலாம்.

ஆனால் உண்மையில் யார் இந்த ஒஸாமா பின் லாதின்?

எல்லோரும் அறிந்ததும் சொல்லக்கூடியதுமான தகவலே 1957இல் முஹம்மத் பின் அவாட் பின் லாதின் பிறந்தது சவூதி அரேபியாவில் மிகவும் பிரசித்தி பெற்ற யெமன் நாட்டு வியாபாரியின் நான்காவது மனைவிக்கே ஆகும்.மற்றும் ஒஸாமாபின் லாதினின் ௨௨ ஒன்றுவிட்ட சகோதரர்களும் (Half brothers)பல சாம்ராஜியங்களின் (empire)கட்டுப்பாட்டளர்களாவர்.(ஸிரியன் குருப், லெபனீஸ் குருப், ஈஜிப்சியன் குருப், ஜோர்டனியன் குருப் இன்னும் பல......)இக் குழுக்களும் இவற்றை சார்ந்தவர்களும் மத்திய கிழக்கினூடாக செய்கின்ற வியாபாரம் ஏறத்தாள ௬மில்லியன் அமெரிக்க டொலர்களாக மதிப்பீடப்பட்டுள்ளது.

பின் லாதினின் தந்தை முஹம்மட் சவூதி மன்னர் அப்துல் அஸீஸின் நெருங்கிய நண்பராவார்.இதனால் புனித நகரங்களான மக்காவிலும் மதீனாவிலும் இஸ்லாமிய கட்டிடங்களை கட்டுவதற்கான உடன்படிக்கையை மன்னர் இவரிடம் கையளித்தார். அத்துடன் 1967வரையில் ஜெருஸலத்தின் தலைநகரில் உடன்படிக்கையை கையளித்ததும் இவரின் பேரதிஷ்டத்திற்கு வழி வகுத்தது.இதனைத் தொடர்ந்து பின் லாதினின் வீதி நிர்மானம், வேளாண்மை, தொலைத் தொடர்பு, பெற்றோலிய பொருட்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் பல வியாபார நடவடிக்கைகளை விரிவடையச் செய்தார். தகவலின்படி பின் லேடனின் பிள்ளைகள் கல்வி பயின்ற பாடசாலை மன்னர் அப்துல் அஸீஸின் பிள்ளைகளும் மற்றும் மத்திய கிழக்கில் பிரசித்தமானவர்களான ஜோர்தான் மன்னன் ஹுசைன், Kashoggi சகோதரர்கள் மற்றும் நடிகர் ஒமர் சரீப் போன்ற பிரசித்தமமானவர்கள் கல்வி பயின்ற பாடசாலைகளிலே ஆகும். ஒன்று விட்ட சகோதரர்களைப் போல் ஒஸாமா பின்லேடன் ஒரு சில நாற்கள் தந்தையின் கம்பனிக்காக உழைத்தார். அத்துடன் அக்குழுவில் ஒருவராகவும் புகழ் பெற்றார்.



அவர் ஜித்தாவில் உள்ள அரசியலின் முக்கிய நிலையங்களில் கூடுதலான நேரத்தை கழிக்க விரும்பியவர்.அந்த தினங்கள் முடிவுக்கு வந்தன.

எவ்வாறாயினும் 1979 இல் ஸோவியட் யூனியன் ஆப்கானிஸ்தானை தாக்கிய போது அதிக எண்ணிக்கையான ஸவுதி மக்கள் அவர்களின் முக்கிய அயலவர்களுக்கு ஆதரவு வழங்கச் சென்றனர். ஒஸாமா பின் லேடன் அவர்களின் குடும்பப் பணத்தையும் நிர்மானித்தலுக்கு பயன்படுத்தப்படுகின்ற உபகரணங்களையும் கொண்டு சுரங்கங்களையும் கால்வாய்களையும் மலைகளில் அமைப்பதற்கும் வளையமைப்பு பயிற்சி முகாம்களையும், இராணுவத் தளங்ளையும் அமைப்பதற்கு பயன்படுத்தினார். அனேகமான முஜாஹிதீன் இராணுவக் குழுக்களைப் போல அமெரிக்க அரசினால் சோவியட் யூனியனை தோற்கடிப்பதற்காக 06 மில்லியன் அமெரிக்க டொலர் செலவழிக்கப்பட்டு ஒஸாமா பின் லாடன் பயிற்சியளிக்கப்பட்டார்.சோவியத் யூனியன் படையுடன் நடந்த மோதல் முடிவடைந்ததும் ஒஸாமா பின் லாடன் மீண்டும் ஸவூதி அரபியாவுக்கு சென்று பாதைகளை நிர்மாணிப்பதிலும் மற்றும் ஏனைய செயற்திட்டங்களை மேற்கொள்வதிலும் அவர் தொடர்ந்து ஈடுபட்டார்.

ஆப்கானிஸ்தானில் ஜிஹாத் ஒன்று ஆரம்பமாகவுள்ளது. ஏனெனில் இஸ்லாத்தின் அடிப்படையில் பின்னால் தீவிரமொன்று உருவாக சாத்தியமுள்ளதாக அவர் கூறினார். இருந்த போதிலும் அவரும் அவருடைய முஜாஹிதீன்களும் சோவியத் ரஸ்யாவை வெளியேற்றுவதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்காவுடன் சேர்ந்து செயற்பட்டார்கள். அப்பொழுது அவர் மத்திய கிழக்கு மக்கள் மத்தியில் ஒரு மனப்பதிவொன்றை உருவாக்கினார். ரஷ்யாவின் பயம் முற்று முழுதாக நீக்கப்பட்டதும் லேடன் அவர்கள் அமெரிக்கா திரும்பினார். அங்கு சிலுவைப் போராளிகள் மீது அவரின் திசை திரும்பியது. அவர்கள் யாரெனில் பலஸ்தீன முஸ்லிம்களை துன்புறுத்துவதற்கு இஸ்ரேலுக்கு உதவி செய்பவர்கள்.

1980 ஆம் ஆண்டுகளில் பின் லேடன் அவருடைய கட்டுமானபட்பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள சூடான் சென்றார். அங்கு அவருடைய செயற்திட்டத்தில் சூடானின் Port முதல் தலை நகரம் Cartoom வரையிலான 800 கிலோ மீட்டர் தூரமான குழாய் வழி வேலைத் திட்டமும் உள்ளடங்கியிறுந்தது. அதன் மூலம் எண்ணைய் விநியோகத்துக்காக பயன்படுத்துகின்ற குழாய்வழிகளுக்கான பணத்தை லேடன் முதலீடு செய்ததாகவும் அங்கு ஒரு தகவல் பதிவாகியுள்ளது. அவ்வாறிருந்த போதும் குழாய் வழிக்கான அனைத்துக் காசும் தஸ்மேனியன் கம்பனியாலும் பங்காளிகளாலும் வழங்கப்பட்டது என கலகாரி கம்பனி கூறியது. அதனைத் தொடர்ந்து சூடானில் தன்னுடைய வர்த்தக சாம் ராஜியத்தை கட்டி எழுப்பும் பணியை தொடர்ந்தார். அத்துடன் விவசாயம் மற்றும் மருந்துப் பொருள் உற்பத்தித் துறைகளில் கவனம் செலுத்தினார். ஆனால் சூடான் தலைவர் உமர் பஷீர் பின் லேடனை ஒரு சாதாரன வியாபாரி என கருதினார். ஆனால் பயங்கரவாதத்துக்கு நிதி செலுத்துவதாகவும், முஸ்லிம் பயங்கரவாதிகளை உருவாக்குவதாகவும் அமெரிக்காவும் ஏனைய வல்லரசும் குற்றம் சாட்ட முயற்சி செய்தது. ஏற்கனவே அவர் மருந்துப் பொருள் உற்பத்தி செய்வதைகண்டு அமெரிக்கர்கள் அது இரசாயன ஆயுத உற்பத்தி சாலை என காட்ட அமெரிக்கா முயற்சித்தது. 1993 ஆம் ஆண்டு அவருடைய கண்ணி நேர்காணலில் சர்வதேச ரீதியாக அவர் காட்டப்பட்டார். அந்த நேரத்தில் சூடானில் கட்டட நிர்மானத்தில் ஈடுபட்டு வந்தார். ஆப்கானிஸ்தான் கெரில்லாக்களுக்கு இந்த புள்டோஸர்கள் பயன்படுத்தியதாக குற்றம் சாட்டினார். அது மட்டுமின்றி பொஸ்னிய முஸ்லிம்களுக்கும் உதவினர். அதன் காரணமாகவே W.T.C அழிந்ததும் வழக்கம் போல் ஒஸாமா செய்ததாக சொல்லியது.

அடுத்த வருடத்தில் பின் லேடனின் குடும்பத்தவர்கள் லேடனை விட்டு அவர்களாகவே தூரமானார்கள். அவர்களின் குடும்பத் தலைவர்களுல் ஒருவரான முஹம்மத் பக்ர் பின் லேடன் தன் குடும்பத்தின் வெளிப்பாடாக இவ்வாறு தெரிவித்தார் "ஒஸாமாவின் செயல்களுக்காக கண்டனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவிப்பதாகவும் அதற்கு ஒஸாமாவே பொறுப்பாகும் என கூறினார்''. ஒஸாமாவுடைய மாமன்மார்களுள் ஒருவர் அமெரிக்கா தூதுவராலய குண்டு வெடிப்பில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் தன் குடும்பம் சார்பாக அனுதாபம் தெரிவிக்கிறேன் என்றார்.இதன் காரணமாக சூடானிய அரசாங்கம் பின் லேடனையும் அவரது சகாக்களையும் நாட்டை விட்டு வெளியேறுமாறு உத்தரவிட்டார்.அதனைத் தொடர்ந்து அங்கே அவர் உதவிய அடிப்படைவாத இஸ்லாமிய குழுவான தலிபானை நாடி ஆப்கான் செல்ல முடிவு செய்தார்.

அங்கே சென்றதும் அவரை வரவேற்று அவருக்கு பாதுகாப்பும் தலிபான்களால் வழங்கப்பட்டது. பிறகு அவர் அங்கு தலிபான்களுக்கு இராணுவ பயிற்சி நிலையங்களை உருவாக்கவும், மலைகளில் ஆயுதசாலைகளை நிறுவதற்கும் உதவி செய்தார் என சில தகவல்கள் கூறுகின்றது.அவர் கந்தகரில் அவருடைய குடும்பத்தாருடன் அரிதான நேரங்களையே கழித்தார்.ஏனைய நேரங்களை குகைகளிலும் கூடாரங்களிலுமே கழிக்க விரும்பினார். ஏனெனில் அவருக்காகவே தங்களை தியாகம் செய்ய காத்திருக்கும் குழுவின் பாதுகாப்பில் இருக்க விரும்பினார்.

அதே குழுவில் ஒஸாமாவுடைய 16 வயது மகன் முஹம்மத் பின் லேடன் இருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் குகைகளிலிருந்தே பல்வேறுபட்ட முஸ்லிம் குழுக்களுக்கிடையே தொடர்பை வைத்துக் கொள்ளும் வகையில் தொடர்பு சாதன வசதிகள் மூலம் வாழ்ந்தார்.

ஒஸாமா பின் லேடனின் குழுவான அரபியில் "அக் குவைதா" என அழைக்கிறது, அதாவது அடிப்படை அல்லது தளம் என்ற பொருள்படும்.அமெரிக்கா ஒஸமா பின் லேடனை ஒப்படைக்குமாறு அழுத்தம் கொடுத்திருக்கிறது. ஆனால் அவர் எந்த பயங்கரவாதத்திலும் ஈடுபடவில்லை என்பதனால் அவர்கள் அவரை கொடுக்க மறுத்தார்கள். இது தொடர்பாக பல மூலங்கள் அறிக்கை விடுத்திறுக்கிறது.அதாவது இரண்டு வருடங்களுக்கு முன் பின்லேடனின் மகள் (அவருக்கு நான்கு திருமணங்கள் மூலம் 20 குழந்தைகள் உள்ளன) தலிபான் இயக்கத் தலைவர் முல்லா உமர் திருமணம் செய்தாரென்றும் அதே நேரம் ஒஸாமா பின் லேடன் தலிபான் அரசின் மிக உயர் மட்ட தலைவர் ஒருவரினது மகளையும் திருமணம் செய்துள்ளார் என கூறுகிறது. இவ்விரண்டு திருமணங்களும் ஆப்கானிஸ்தானில் ஆட்சி செய்கின்ற தாலிபானுடான தொடர்பை, நெருக்கத்தை காட்டுகின்றது. சில வெளிநாட்டு பாதுகாப்பு நிபுணர்கள் நம்புகிறார்கள் இப்படிப்பட்ட தொடர்புகள் எவ்வளவு அமெரிக்க அச்சுறுத்தல்கள் நிகழ்ந்தாலும் ஒஸாமா பின் லாடனை ஒப்படைப்பதற்கு சாத்தியம் குறைவு என கருதுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிகக மக்களுக்கும், இராணுவத்திற்கும் எதிராக எடுக்கும் எந்த நடவடிக்கையும் அவருடைய புனித போரினால் நியாயப்படுத்தப்படும் 1998ம் ஆண்டு ABCநிருபரான ஜோன் மிளருக்கு அளித்த நேர்காணலிலும் ,பொதுவாக வெளியிட்டுள்ள பத்வாவிலும் குறிப்பிட்டுள்ளார். இந்த பத்வா முஸ்லிம்களை கொல்வதில் யார் ஈடுபடுகிறார்களோ அல்லது யார் உதவி செய்கிறார்களோ அவர்களைச் சாரும்.

1998ம் ஆண்டு பத்வாவில் பின் லேடன் கூறுகிறார், *" இறைவனின் கட்டளைக்கு இணங்கிச் செயற்படுபவர்களையும் இறைவனை நம்புகின்றவர்களையும் அமெரிக்கர்களை கொள்வதற்கும் அவர்களுடைய பணத்தை சூறையாடுவதற்கும் எங்கிருந்தாலும் எப்போதிருந்தாலும் அழைக்கிறோம். நாங்கள் முஸ்லிம் உலமாக்களையும்,தலைவர்களையும்,இளைஞர்களையும்,இராணுவ வீரர்களையும் சைத்தான்களாகிய அமெரிக்க துருப்புக்கள் மீதும் மேலும் அந்த பேயின் உதவியாளர்கள் மீதும் மேலும் யார் அவர்களுக்கு பின்னால் இருக்கின்றார்களோ அவர்களை அழிக்கவும் உங்களை அழைக்கிறோம். இது அவர்களுக்கு ஒரு பாடமாக அமையலாம். அமெரிக்க பிரஜைகளை,இராணுவத்தினரையும் எந்த நாட்டிலிருந்தாலும் அவர்களை கொல்வது ஒவ்வொரு முஸ்லிமினதும் கடமையாகும்"*

*"நீங்கள் ஒரு பயங்கரவாதியாக இருக்கின்றார்கள் என்றால்"*என்று ஒரு பேட்டியாளர் லேடனை வினவியபோது அவர் இவ்வாறு பதிலளித்தார்.

பயங்கரவாதம் மெச்சக் கூடியதாகவும் இருக்க முடியும் அதே நேரம் கண்டிக்கக் கூடியாதாகவும் இருக்க முடியும் என்றார்.மக்களுடைய பாதுகாப்பு,சொத்துக்ளுக்கு பயங்கரவாதம், குற்றம் மேலும் களவு,கொள்ளை போன்றன வழமையாக தடையாக அமைகின்றது.இதில் ஒருவகையேனும் சந்தேகம் இல்லை.ஒவ்வொரு பிரதேசமும்,ஒவ்வொரு நாகரிகமும்,கலாச்சாரமும் நேர்மையற்ற செயல்,கொடுங்கோள் ஆட்சி போன்றவற்றை நீக்குவதற்காக நிச்சயிக்கப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு கீழ் பயங்கரவாத்தை எதிர்நோக்க வேண்டும் ▪



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லா உமருடன் ஒரு நேர்காணல்.

**நீங்கள் ஏன் ஒஸாமா பின் லேடனை நாட்டை விட்டு வெளியேற்றக் கூடாது?**

உமர்: -நாங்கள் இஸ்லாத்துக்காகவே அவரைப் பாதுகாக்கிறோமே தவிர அவர் தன்னை பாதுகாக்கும்படி கோரவில்லை.அதுவே இஸ்லாத்தின் கௌரவமும் ஆப்கானிஸ்தானின் கலாச்சாரமும் ஆகும்.

**உங்களுக்குத் தெரியுமா அமெரிக்காவின் சர்வதேச பயங்கரவாதத்திற்கு எதிரான பிரகடனத்தை அறிவீரா?**

உமர்: -நான் இரண்டு வாக்குறுதிகளை கவனத்தில் கொள்கிறேன்.ஒன்று இறைவனுடையது.நீங்கள் இறைவனுக்காக ஓர் புனிதப் பயணத்தினை ஆரம்பிப்பீர்களேயானால் உங்கள் பாதையில் எங்கு வேண்டுமானாலும் இந்த பூமியில் தங்கலாம்.அதே வேளையில் நீங்கள் பாதுகாக்கவும் படுவீர்கள். ஆனால் புஸ்ஸினுடைய கருத்தோ இந்த உலகில் எங்கு ஒழிக்கவும் இடமில்லை.எனக்கு உங்களை தேடிக் கொள்ள முடியும். நாங்கள் பார்ப்போம் யாருடைய வாக்குறுதி நிறைவேற்றப்படுமென்று.

**ஆனால் நீங்கள் உங்களைப் பற்றியோ,உங்கள் மக்களை பற்றியோ,தலிபானைப் பற்றியோ,உங்கள் நாட்டைப் பற்றியோ பயப்படவில்லையா?**

உமர்: -சகல வல்லமையும் பொருந்திய இறைவன் நம்பிக்கையாளர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் எப்போதும் உதவி செய்து கொண்டே இருப்பான்.இறைவன் ஒரு போதும் அநியாயக்காரர்களின் மீது திருப்த்திப்பட மாட்டான். நாங்கள் உலக நோக்கில் பார்க்கும் போது அமெரிக்கா பலம் பொருந்திய நாடு.சில வேளை எம்மைவிட இரு மடங்கு அல்லது மும்மடங்கு பலம் மிக்கவர்களாக இருக்கலாம். இருந்த போதிலும் எங்களை அவர்களால் தோற்கடிக்க முடியாது.நாங்கள் நிச்சயமாக நம்புகிறோம். இறைவன் எங்களுடன் இருக்கம் வரை யாரும் எங்களுக்கு எந்த தீங்கும் செய்ய முடியாது.

இஸ்லாமிய நாடுகளின் நிலையினை சற்று நோக்குங்கள். அங்குள்ள மக்கள் விருத்தியடைந்தவர்களாக காணப்படுகின்றனர். அந்நாடுகளில் இஸ்லாம் அழிகி வருவதாக மக்கள் முறையிடுகின்றனர். அங்கு, இஸ்லாமிய சட்டங்களுக்கு பதிலாக சடவாத சட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன. ஆனால் மக்களோ தமது இஸ்லாமிய கொள்கையில் உறுதியாக இருக்கின்றனர். இம்மக்கள் மீது இருக்கும் மனவேதனையும், ஏமாற்றமும் அவர்களை இதுபோன்ற தற்கொலைத் தாக்குதல்களுக்குச் செய்வதற்கு உந்துகின்றது. இனி இழப்பதற்கு எதுதான் இருக்கிறது என இவர்கள் கருதுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நீங்கள் இந் நிலைமைகள் பற்றி கவலைப்படவில்லை என நீங்கள் என்னிடம் கூறினீர்கள். ஆனால் உலகில் பல பாகங்களில் வாழ்ந்து வரும் ஆப்கானியர்கள் இந்நிலைமை பற்றி கவலையடைந்துள்ளனரே!**

**உமர்** :- நாமும் இந்நிலை பற்றி கவலையோடும் கரிசனையோடும் உள்ளோம். எதிர்காலத்தில் பல முக்கிய விடயங்கள் வர இருக்கின்றன. ஆனால் முற்று முழுதாக இறைவனுடைய கருணையில், அன்பில் தங்கியிருக்கிறோம். நிச்சயமாக இறைவனது அன்பு, கருணை அன்பு என்பன முஸ்லிம்கள் மீது இருக்கிறது.

எமது சிந்தனைக்குறிய விடயம் என்வென்றால் ,

இன்று நாம் உஸாமாவை ஒப்படைத்தால், ஒஸாமாவை ஒப்படைப்பதை எதிர்த்து வாதிடுகின்ற முஸ்லிம்கள், நாம் அவரை ஒப்படைத்ததையிட்டு எம்மை கண்டிப்பார்கள், ஏசுவார்கள். "நீங்கள் ஏன் இஸ்லாத்தின் கௌரவத்தை நாசப்படுத்தினீர்கள்? ஏன் நீங்கள் முஸ்லிம்கள் மீது அவமானத்தை கொண்டுவந்தீர்கள்?" என்று எல்லா மனிதர்களும் எம்மிடம் கேள்வி கேட்பார்கள்.

எல்லோரும் அமெரிக்காவுக்கு பயப்படுகின்றனர். எனவே அதனை திருப்திப் படுத்த முயற்சிக்கின்றனர்.

நான் உங்களிடம் சில விடயங்களை கூறிக் கொள்ள விரும்புகிறேன். அமெரிக்கா இஸ்லாத்தை பணயம் வைத்து, செயற்படுகின்ற நிலையால் – அண்மையில் நடந்த தாக்குதல்கள் போன்ற செயள்களினை அமெரிக்கர்களினால் தடுத்து நிருத்த முடியாது. இஸ்லாத்தை ஈடு வைத்து பணயம் வைக்கின்ற நிலைமையை அமெரிக்கா இஸ்லாமிய உலகிலும் குறிப்பாக இஸலாமிய நாடுகளிலும் செய்து வருகின்றது.

இஸ்லாமிய நாடுகளின் நிலையினை சற்று நோக்குங்கள். அங்குள்ள மக்கள் விருத்தியடைந்தவர்களாக காணப்படுகின்றனர். அந்நாடுகளில் இஸ்லாம் அரிகி வருவதாக மக்கள் முறையிடுகின்றனர். அங்கு, இஸ்லாமிய சட்டங்களுக்கு பதிலாக சடவாத சட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன. ஆனால் மக்களோ தமது இஸ்லாமிய கொள்கையில் உறுதியாக இருக்கின்றனர்.

இம்மக்கள் மீது இருக்கும் மனவேதனையும், ஏமாற்றமும் அவர்களை இதுபோன்ற தற்கொலைத் தாக்குதலைத் தாக்குதல்களைச் செய்வதற்கு உந்துகின்றது. இனி இழப்பதற்கு எதுதான் இருக்கிறது என இவர்கள் கருதுகின்றனர்.

உண்மையில் அமெரிக்கா இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் எனக் கருதின், அது என்ன செய்ய வேண்டும் என்பதை அது அறியும். எனவே இஸ்லாத்தின் மீதுள்ள அதன் கெடுபிடிகளை, அடக்கு முறைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்கா நிறுத்த வேண்டும். இஸ்லாம் தன் பாட்டில் செய்வதற்கு வழிவிட வேண்டும்.
எனவே அமெரிக்காவின் செயற்பாடுகள் சுலபமாக்கப்படுவதோடு, மற்றைய நாடுகள் தமது சொந்த விவகாரங்களில் கவனஞ்செலுத்தும்.

**''அமெரிக்காவானது, இஸ்லாமிய உலகத்தினை பணயம் வைத்துள்ளது''எனக் கூறுவதன் மூலம் நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?**

**உமர் :-** அமெரிக்கா பெரும்பாலான இஸ்லாமிய நாடுகளின் அரசாங்கங்களை தன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளது. இந்த நாடுகளை ஏளத்தில் விற்கப்படும் வரை இந்த நாடுகளை அமெரிக்கா தம் கை வசம் வைத்துக்கொண்டிருக்கும்.
ஆனால், இங்குள்ள ஆட்சியாளர்களுக்கும் மக்களுக்கும் இடையில் மிக நீண்ட இடை வெளி காணப்படுகின்றது. அரசாங்கங்களை இஸ்லாத்தை பின்பற்றுமாறு மக்கள் வற்புறுத்துகின்றனர். எனினும் இவ்வரசாங்கங்கள் இம்மக்களின் வேண்டுகோளுக்கு செவீமடுப்பதில்லை.
இந்நிலையில், அமெரிக்காவின் பிடியில் இருக்கும் அரசாங்கங்களை எதிர்ப்பதற்கு மக்கள் சக்தியற்றவர்களாக காணப்படுகின்றனர். எனவே அவ்வரசுகள் சீரழிவதோடு மக்களும் புரக்கணிக்கப்படுகின்றனர்.
இந்நாடுகளில் எவரேனும் இஸ்லாத்தின் தூய வழியை பின்பற்றினால், அவரை அரசாங்கம் கைது செய்து சித்திரவதை செய்யும் அல்லது கொலை செய்துவிடும். இவை அமெரிக்காவின் செயல்களின் பிரதபலிப்பு. எனவே அமெரிக்கா இந்த அரசாங்கங்களுக்கு ஆதரவு வழங்குவதை நிறுத்தி, மக்களது அபிலாசைகளுக்கு ஏற்ப அவ்வரசுகள் செயற்பட வழிவிட்டால் இது போன்ற அசம்பாவிதங்கள் நடைபெறாது.
அமெரிக்கா உருவாக்கிய தீமையே அதனை தீருப்பித் தாக்கியுள்ளது.நான் அல்லது உஸாமா அல்லது மற்றவர்களோ இறப்பதால் இந்த எதிர் சக்தி மறைந்து விடாது.
மாறாக, அமெரிக்கா அதன் கொள்கையினை மீள் பரிசீலனை செய்ய வேண்டும். அப்போது அமெரிக்கா அதிகாரத்தை ஏனைய நாடுகள் மீது. குறிப்பாக இஸ்லாமிய நாடுகள் மீது திணிப்பதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.
''மனிதாபிமான உதவி'' என்ற பெயரில் அமெரிக்கர் ஆயிரக்கணக்கான ''பைபில்''களை ஆப்கனுக்குள் கொண்டு வருவதோடு அவர்கள் கிறிஸ்தவ பிரச்சாரத்தில் ஈடுபடுகின்றனர்.
ஆப்கானிஸ்தானுக்குள்ளே இவர்கள் இதைச் செய்ய முனைந்தார்கள் என்றால், அரபு நாடுகளில் இவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்பதை கற்பனை செய்து பாருங்கள். ஆனால் இவை பற்றி முஸ்லிம்கள் அறிந்து வைத்துள்ளனர். எனினும் அவர்களால் எதனையும் செய்ய முடியாதுள்ளது.
எனவே, இறுதியாக அவர்கள் தற்கொலைத் தாக்குதல்களுக்கு முன்வருகின்றனர்.

**எனவே அமெரிக்காவிடம் ஒஸாமாவை கையளிப்பதில்லையா ?**

**உமர்** :- முடியாது, எம்மால் அவ்வாறு அவரை கையளிக்க முடியாது. அவ்வாறு நாம் அவரை கையளித்தால் நாம் உண்மை முஸ்லிம்களல்ல. அத்தோடு இஸ்லாத்துக்கும் முடிவு நிலை ஏற்படும்.
அமெரிக்காவின் தாக்குதலுக்கு அஞ்சியிருந்தால் நாம் ஒஸாமாவை ஒப்படைத்திருப்போம். ஆனால் எமக்கு துணையாக எந்த நாடும் இல்லாத இந்நிலையில் அமெரிக்கா எம்மை தாக்கலாம். எனினும் இந்த அச்சுறுத்தல்களுக்கு நாம் அடி பணிய மாட்டோம்.

**முழுப்பலத்தையும் கொண்டு அமெரிக்காவோடு போராட முடியுமா ? அத்தோடு அமெரிக்கா உங்களை வெற்றி கொள்வதையும் பொது மக்கள் மேலும் பாதிக்கப்படுவதையும் தடுக்க முடியுமா ?**

**உமர்** :- மேலோட்டமாக நோக்கின் இது ஓர் சிக்கலான விடயம் தான். எனினும் நான் ஒரு விடயத்தை உறுதியாக நம்புகின்றேன். அது என்னவெனில், இறைவனது நாட்டத்துக்கு எதிராக எம்மால் எதனையும் செய்ய முடியாது. எந்தவொரு மனிதனும் முற்றுமுழுதாக இறைவனைச் சார்ந்திருந்தால், அவனுக்கு இறைவனது அன்பும், உதவியும் கிட்டும். இதன் மூலம் அவன் தனது முயற்சியில் வெற்றியை அடைவான்.

*அன்று ரஷ்யா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவின் மீது நடத்தப்பட்ட தாக்குதலும் அதன் எதிர்விளைவுகளும்

***அண்மையில் அமெரிக்காவில் நடாத்தப்பட்ட விமான குண்டுத் தாக்குதலின் பின்னர் உருவாகியுள்ள சூழல், உலக மக்களது எண்ணங்கள் முஸ்லிம்களைப் பொருத்த வரையில் எத்தகைய எதிர் விளைவுகளைத் தோற்றுவித்துள்ளன. என்பதை விளக்கும் நோக்கில் இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது,***

இன்று உலகின் மூலை முடுக்குகளிலெல்லாம் பேசபபடுகின்ற சகல மட்டத்தினறாலும் அலசப்படுகின்ற ஒரு கருப்பொருளாக அமெரிக்காவின் உலக வர்த்தக நிலையம் (WTC), பெண்டகன் – இராணுவ மத்திய தளம்என்பவற்றின் மீது நடாத்தப்பட்ட விமானத்தாக்குதல்கள் அமைந்துள்ளன.

அமெரிக்காவின் நலன்களுக்கு தீமை பயக்கும் வகையில் நடர்த்தப்படுகின்ற எந்த விதமான தாக்குதலாக இருந்த போதிலும் அதன் பின்னணியில் முஸ்லிம்களே உள்ளனர் என்பது அமெரிக்கா அடிக்கடி கூறும் குற்றச்சாட்டு. ஐரோப்பாவில் முஸ்லிம்களின் சனத்தொகை இன்று 20 மில்லியனையும் தாண்டியுள்ளது. அதே வேளை ஐரோப்பபாவில் யூதர்கள் வெறும் 1.5 மில்லியன் மாத்திரமே, இதன் காரணமாக ஐரோப்பாவில் அண்மையில் கூடிய யூதர்களின் ஸியோனிஸ அமைப்புக்கள், இந்நிலை தொடர்ந்திருப்பது யூத நலன்களுக்கு ஆபத்தாக அமைய முடியும் என்பதால் இஸ்ரேலின் தலைநகர் 'டெல் அவிவ்' இலிருந்து யூதர்களை கொண்டு வந்து குடியேற்ற வேண்டும் எனவும், இங்கு வாழ்கின்ற முஸ்லிம்கள் பற்றிய நல்லபிப்பிராயத்தை பொது மக்களிடமிருந்து நீக்குவதற்கான தந்திரோபாயங்களிலும், சதித்திட்டங்களிலும் கூடிய விரைவில் ஈடுபட வேண்டும் எனவும் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளன.

முஸ்லிம்கள் என்போர் ஏனைய முஸ்லிம்கள் விடயத்தில் கவனத்தோடும், கரிசனையோடும் நடந்துகொள்ள வேண்டியவர்கள். முஸ்லிம்கள், ஒரு மூலையில் அவதிப்பட்டுக் கொண்டும், கொலை செய்யப்பட்டுக் கொண்டிறுக்கும் மற்ற முஸ்லிம்களுக்காக கவலைப்பட்டு அந்நிலையிலிருந்து அவர்களை விடுவிப்பதற்கான தம்மாலியன்ற சகல நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டும். ஆகக்குறைந்தது அவர்களுக்காக துஆக் கேட்பதனூடாக உதவி செய்ய முடியும் இத்தகைய உணர்வுள்ள முஸ்லிம்களின்ஒற்றுமையை சீர்குலைத்து அவர்களது அரசியல், பொருளாதார சுய நிர்ணய உரிமைகளை மழுங்கடித்து சக்தியைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதறடிப்பதில் முழு உலகமும் கைகோர்த்துள்ள நிலைமையை அவதானிக்க முடிகின்றது. இதற்காக எத்தகைய வழிமுறைகளை கையாளலாம் என்பது பற்றியே வல்லரசு நாடுகளும் அவற்றின் செல்லப் பிள்ளையான இஸ்ரவேலும் ஒவ்வொரு வினாடியும் சிந்தித்துக் கொண்டிருக்கின்றன.

அமெரிக்காவின் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு எந்தவொரு குழுவும் உரிமை கோராத நிலையில் அமெரிக்கா தனது சகலவிதமான தொடர்பு சாதனங்களையும் பயன்படுத்தி, முஸ்லிம்களின் மீது அப்பழியைச் சுமத்தியது. ஹமாஸ் இயக்கம் இதனைச் செய்யவில்லை என வழமைக்கு மாறாக பலஸ்தீன ஜனாதிபதி யாஸிர் அரபாத் கூறி மறுத்துரைத்தார். அடுத்து அமெரிக்காவின் ஊது குழல்களான CNN, SKY செய்திகளில் தாக்குதலின் சூத்திரதாரியாக முழு உலகுக்கும் சித்தரிக்கப்பட்ட உஸாமா பின் லாதின் தன்னால் இந்தளவு தூரம் திட்மிட்டு தாக்குதல் நடாத்த முடியாது எனக் கூறி கடுமையாக மறுத்துரைத்தார்.

இந்நிலையில் சர்வதேச ரீதியாக முஸ்லிம்கள் அமெரிக்கா தாக்கப்பட்டமையை அதற்கு நல்லதொரு பாடமாகவும், பலத்த அடியாகவும், அதன் கொட்டத்தை அடக்க நல்லதொரு நடவடிக்கையாகவும் கருதியது மாத்திரமின்றி, அதனை பெருநாளாகவும் கருதி இனிப்புக்களை பறிமாரிக் கொண்டதாகவும் முழு உலகுக்கும் காட்டி எல்லா முஸ்லிம்களும் ஏனையோர்களின் எதிரிகளே என்பதனை தொடர்பு சாதனங்களுடாக பெரும் பிரசாரம் ஒன்றையும் அமெரிக்கா முடுக்கி விட்டது.

அமெரிக்காவில் நடாத்தப்பட்ட தாக்குதலின் பின்னனியில உஸாமாவும் அவரது 'அல் குவாதா' எனும் இராணுவப் பிரிவும் தொடர்புபட்டுள்ளதாக சோடிக்கப்பட்டு முழு உலகுக்கும் அப்பட்டமான பொய்ப் பிரசாரம் ஒன்றை CNN செய்திச் சேவை கொண்டு செல்கிறது.மேற்கத்தேய செய்தித் தாபனங்கள் தங்களது தகவல்களால்மக்களை மூலைச் சலவை செய்து வருகின்றன. வல்லரசுகளின் ஊது குழல்களாக இவை செயற்பட்டு வருகின்றன.



இந்நிலையில் முஸ்லிம்கள் இப்பிரச்சினையை நடு நிலையில் நின்று இஸ்லாமிய நிலைக்களனில் நோக்க வேண்டும். அமெரிக்காவில் யூதர்களின் சனத்தொகையையும் தாண்டி 70 லட்சம் முஸ்லிம்கள் வாழ்ந்து வருகின்றனர். அமெரிக்காவில் ஒரு சில மாநிலங்களில் பெரும்பான்மையினராக முஸ்லிம்கள் மாறும் நிலை உள்ளது. இஸ்லாமிய எழுச்சியின் அலைகள் அமெரிக்காவில் வேகமாக ஆர்ந்தெழுந்துள்ளன. இஸ்லாத்தை நோக்கி அமெரிக்கர்கள் ஒவ்வொருநாளும் வந்து கொண்டிருக்கிறார்கள். இஸ்லாமிய வழிகாட்டல் நிலையங்கள், இஸ்லாமிய போதனா கழகங்கள், பல்கலைக் கழகங்கள், சிறார்களுக்கான அறபு மொழி மத்ரஸாக்கள், இஸ்லாமிய மத்திய நிலையங்கள், பள்ளி வாசல்கள், இஸ்லாமிய நூல் நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள் என்பன அண்மைக்காலத்தில் அதிகரித்துக்காணப்பட்டன. அதுமாத்திரமின்றி அமெரிக்காவில் சேர்ந்து 'குடியுரிமை' அந்தஸ்துக்களுக்காக விண்ணப்பித்துள்ளவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து காணப்பட்டன. இவ்வேளையில் தான் அமெரிக்காவில் தாக்குதல் இடம்பெற்றது. இத்தாக்குதலின் பின்னர் அங்கு வாழும் அனைத்து முஸ்லிம்களையும் பயங்கரவாதிகளாகவும் அதற்குத் துணை செய்பவர்களாகவும் பொது மக்கள் பார்க்குமளவுக்கு தவறான செய்திகள் திரிக்கப்பட்டுள்ளன. பள்ளி வாசல்கள், இஸ்லாமிய மத்திய நிலையங்கள் என்பவற்றில் C.I.A , F.B.I உளவு அதிகாரிகளின் கழுகுப் பார்வைகள் விழுந்துள்ளன. முஸ்லிம்களின் நடமாட்டம் அடிக்கடி அவதானிக்கப்படுகின்றன. முஸ்லிம்களின் சுதந்திரம் பாதிக்கப்பட்டுள்ளதோடு தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதிலும் பெரும் தடை விழுந்துள்ளது. கெப் (Cab) வாகனம் செலுத்தும் முஸ்லிம் சாரதிகள், கடைச் சிப்பந்திகள் போன்றோர் இனங்கானப்பட்டு கிறிஸ்தவர்களாலும், யூதர்களாலும் தாக்கப்பட்டுள்ளனர். அமெரிக்காவில் முக்கிய தொழில் துறைகளில் ஈடுபட்டு வருகின்ற முஸ்லிம்களை சந்தேகக் கண் கொண்டு நோக்கும் நிலை அதிகரித்துள்ளது.

அமெரிக்காவின் **Super Power** (முறியடிக்க முடியாத சக்தி)க்கு பெரும் இழுக்கு ஏற்பட்டுள்ளதாகக் கருதும் அமெரிக்க மக்களிடத்தில் பயம், பீதி, உளவியல் ரீதியான தாக்கங்கள், ஆஸ்துமா போன்ற பயங்கர நோய்கள் தோன்றியுள்ளன. பலர் தம்மால் நிம்மதியாக தூங்க முடியாமலிருப்பதாகக் கூறியுள்ளனர். இவர்களிடத்தில் முஸ்லிம்களே தாக்குதலுக்கு காரணம் என்ற திரிக்கப்பட்ட செய்திகள் சென்றதனால் முஸ்லிம்களுக்கெதிராக வெறித்தனமான தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றனர். அமெரிக்க அரசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரபு நாடுகளின் வற்புறுத்தலினால் முஸ்லிம்கள் வாழும் பிரதேசங்களில் பாதுகாப்பினை உறுதிப்படுத்தியுள்ளது.

பிரித்தானியா, பிரான்ஸ், கனடா, ஜேர்மனி, இத்தாலி போன்ற நாடுகளில் வாழும் முஸ்லிம்களும் அமெரிக்கத் தாக்குதலின் எதிரொலியாக அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ளனர். சில இடங்களில் பள்ளிவாசல்களும், இஸ்லாமிய மத்திய நிலையங்களும் இனவாதக் கும்பல்களின் தாக்குதல்களுக்கு உள்ளான விடயங்களை அரபு மொழியில் வெளி வந்துள்ள சஞ்சிகைகள் பிரசுரித்துள்ளன.

இந்த வகையில் அமெரிக்காவின் மீது மேற்கொள்ப்பட்ட தாக்குதலைக் கண்டிக்கும் வகையில் கடார் நகரில் வாழ்ந்து வருகின்ற நவீன கால முஜ்தஹீத் அஸ்சேஹ் கலா சிதி யூசுப் அல் – கர்ளாவி அவர்கள் விடுத்த அறிக்கை இன்டர் நெட்டில் வெளியிடப்பட்டது. அவ்வறிக்கையில் பொது மக்கள் கொலை செய்யப்பட்டதைக் கண்டித்ததோடு காயப்பட்டவர்களுக்காக இரத்த தானம் செய்யுமாறு அங்குள்ள முஸ்லிம்களை வேண்டியுள்ளார். இவரைத் தவிர முஸ்லிம் உலகின் தலை சிறந்த அறிஞர்கள் பலரும் இவ்வாறே கண்டித்துள்ளனர்.

இஸ்லாம் யுத்தங்களில் கூட எதிரிகளோடு சேர்த்து அப்பாவி பொது மக்கள் கொல்லப்பபடுவதை கண்டிக்கின்றது. யுத்தங்களின் போது நேருக்கு நேர் தாக்க வரும் போது மாத்திரமே எதிரிகளை முஸ்லிம்களால் தாக்க முடியும். பெண்கள், வயது முதிந்தோர், குழந்தைகள், மதத் தலைவர்களைக் கொலை செய்வதற்கு இஸ்லாம் அனுமதி கொடுக்க வில்லை. தீர்மானம் எடுப்பதில் எவ்வித சம்பந்தமும் இல்லாத, தம் அன்றாட தேவைகளுக்காக அலைந்து உழைத்துக் கொண்டிருந்த அப்பாவிப் பொது மக்கள் வர்த்தக நிலையத் தாக்குதலில் கொல்லப்பட்டமையை இஸ்லாம் ஒரு போதும் ஆதரிக்க மாட்டாது. அமெரிக்கா என்ற தனி நாட்டை தாக்குவதற்காக பொது மக்களைத் தாக்கும் செயலை நியாயப்படுத்த முடியாது. அமெரிக்காவின் மத்திய இராணுவ கேந்திர நிலையமான "பெண்டகன்" தாக்கப்பட்டதற்கும், உலக வர்த்தக நிலையம் தாக்கப்பட்டு மிகப் பெரிய மனித அழிவு இடம் பெற்றமைக்கும் பாரிய வேறுபாடு உண்டு.கலாநிதி யூசுப் அல் கர்ளாவி வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது 1996 இல் அமெரிக்காவின் ஒக்லஹோமா குண்டுத் தாக்குதல் 'திமோத்தி' என்ற கிறிஸ்தவ அமெரிக்கன் ஒருவனால் நடத்தப்பட்டது.எனினும் கிறிஸ்தவ மதமோ, அமெரிக்காவோ அல்லது கிறிஸ்தவ உலகமோ சாடப்படவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இஸ்லாமிய உணர்வுள்ள, இஸ்லாத்தின் கொள்கை இவ்வுலகை ஆள வேண்டும் என்று விரும்புகின்ற ஒவ்வொருவரும் இத்தாக்குதல் நடவடிக்கையை தனக்கு ஒரு பெருமையாகக் கருதுவதை விட்டுவிட்டு இதனை ஸியோனிஸ யூதர்களும் இஸ்லாத்தின் எதிர்ச் சக்திகளும் எப்படியெல்லாம் இஸ்லாத்துக்கும் முஸ்லிம்களுக்கும் எதிராக திசை திருப்பியுள்ளனர் இதன் விளைவுகள் எப்படி அமையும் என்பது பற்றி சிந்தித்து இதனை வைத்து முஸ்லிம்கள் மீது சேறு பூச முயலும் சக்திகளை இனங்கண்டு மக்களுக்கு தெளிவை வழங்குவது காலத்தின் தேவையாகும்.

## வளர்த்த கடா மார்பில் பாய்ந்ததடா ..............!

செப்டம்பர் 11 ஆம் திகதி முழு உலகமும் ஆட்டம் கண்டது. உலகின வல்லரசு தாக்கப்பட்டது.வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு என்பது உண்மைப்படுத்தப்பட்டது. அமெரிக்காவின் உலக வர்த்தக மையமும், பாதுகாப்பு மையமான பென்டகனும் அன்று சர்வதேச பயங்கரவாதத்தால் தாக்கப்பட்டது. இத்தாக்குதலுக்கு காரணங்கள் என்ன ? நம் நாட்டு சிங்கள பத்திரிகைகள் கூறிய காரணங்கள் இரண்டு. அவை

1. அமெரிக்கா வளர்த்து ஆளாக்கிய பயங்கரவாதம்
௨. அமெரிக்காவின் பக்கச் சார்பான செயற்பாடுகள்.

இவ்வுண்மையை நியாயப்படுத்துகின்ற பல்வேறு நியாயங்களை அந்தப் பத்திரிகைகள் முன் வைத்திருந்தன.அவற்றிலிருந்து தொகுக்கப்பட்டவை கீழே தரப்படுகின்றன.

1. இத்தாக்குதலின் சூத்திரதாரி ஒஸாமா பின் லேடன் என அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது. தா லிபானை உருவாக்கியது யார்?அமெரிக்காவும் CIA உம் தான் இதைச் செய்தன. ரஸயாவுடன் போரின் போது பிலிபைனிலிருந்து முஸ்லிம்களை CIA அனுப்பியது. ஹிக்மத்தியாறுக்கு ஆயுதப் பயிற்சியை வழங்கியது. நாசகார செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான அனைத்து பயிற்சிகளும் ஆப்கானியர்களுக்கு CIA யால் வழங்கப்பட்டன. பெஸாவரிலுள்ள CIA காரியாலயங்களில் உஸாமா பணி புரிந்தார். இது அமெரிக்காவின் ஓட்டைகளை அறிய வழியமைத்தது.

௨. CIA உம் பாகிஸ்தானின் ISI உம் ரஸ்யாவின் KBG சேவையை இல்லாதொழிக்க தாலிபான்களை உருவாக்கியது. இதன் விளைவை இன்று

இன்று அமெரிக்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது அனுபவிக்கிறது.

3. யூகோஸ்லாவியாவை அழிப்பதற்கு அன்று அமெரிக்க அல்பேனிய – கோசோவோ பிரிவினைவாதிகளைப் பயன்டுத்தியது. பயங்கரச் செயல்களுக்கெனத் தயாரிக்கப்பட்ட பாடத் திட்டத்தை அவர்களுக்கு கற்பித்து பயிற்சிகளையும் வழங்கியது. IRADIUM SETALITE என்ற தொலைத்தொடர்பு நிறுவனம் பிரிவினைவாதிகளுக்கான அனைத்துத் தொடர்பு வசதிகளையும் செய்து கொடுத்தது. பிரித்தானியாவின் Special Air Vice உம், அமெரிக்காவின் விசேட படைப்பிரிவும் இணைந்து அல்பேனிய பிரிவினைவாதிகளுக்கு பூரண பயிற்சியொன்றை வழங்கியமை இன்று நிருபனமாயுள்ளது.சர்வதேச பயங்கரவாதம் இவ்வாறு போசணையூட்டி வளர்க்கப்பட்டுள்ளது.

4. பயங்கரவாதத் தாக்குதலால் தான் மனம் வருந்துவதாகவும், பயங்கரவாதம் எனும் பேயை அழிக்கும் வரைநிம்மதி கிடையாது என்றெல்லாம் பரித்தானிய பிரதமர் டொனி பிேயோர் அமெரிக்க தாக்குதலின் பின்னர் கருத்து தெரிவித்துள்ளார். ஆனால் 17 சர்வதேச பயங்கரவாத அமைப்புக்கள் வளர்ந்து ஆளாவதற்கு அவரது அரசு இடம் கொடுத்துள்ளது. பயங்கரவாதிகளின் சுவர்க்கம் எனுமளவிற்கு லண்டனில் பயங்கரவாதிகள் சுதந்திரமாக செயற்படுகின்றனர். ஹமாஸ், PKK, LTTE, Shining path போன்ற பல பயங்கரவாத அமைப்புக்கள் அங்கு தொழிற்படுகின்றன.

5. மனித உரிமைகள் என்ற பெயரில் USA பயங்கரவாதிகளுக்கு இடம் கொடுத்தது. ஹமாஸ், LTTE என்பவற்றிற்கு கோடிக்கணக்கான டொலர்கள் அங்கு சேர்க்கப்படுகின்றன. அமெரிக்காவின் முன்னாள் நீதிபதி ரேம்ஸோ கிளாக் LTTE சார்பாக நீதி மன்றத்தில் ஆஜரானார். உஸாமா கென்யாவிலுள்ள தூதரகத்தைத் தாக்கியபோது அன்றிருந்த பாதுகாப்புச் செயலாளர். வில்லியம் கொஹேன் அது அரசியல் மதப்பிரச்சினையல்ல. மாறாக சாதாரண கொலை என்று கூறி அதைப் பெரிதாகக் கருதவில்லை. (This is not Religion, This is not Politics, This is Murder)

6. ஆப்கான் பெண்கள் அமைப்பொன்றின் தலைவி USA 27 வருடங்களைபயங்கரவாத நடவடிக்கைகளுக்கான வெடிமருந்துகளையும் ஆப்கானிய பயங்கரவாதத்திற்கு வழங்கியதாக அண்மையில் தெரிவித்ததோடு விரைவில் அதன் பலனை எதிர்பார்க்குமாறு கூறியிருந்தார்.

7. CIA இன் அதிகாரிஸெம் டெக்ஸ் லிபிய பயங்கரவாதிகளுககு 10 டொன் வெடிமருந்துகளை வழங்கியது இன்று நிருபணமாகியுள்ளது.

8. ஈராக் பயங்கரவாதத்துக்கு ஆதரவளிக்கும் நாடு என USA கூறுகிறது. குவைத் ஆக்கிரமிக்கப்பட்ட பின்னரே இக்கருத்து வெளியானது. அதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னரெல்லாம் ஈராக் தமது நாட்டினுல் குர்திஸ் மக்களுக்கு எதிராக இரசாயன ஆயுதங்களைப் பாவித்த போதெல்லாம் ஆதரவு வழங்கியது அமெரிக்காவாகும்.

9. USA ஈரான் ஒரு பயங்கரவாத நாடு என்கிறது. 1981 ஆகஸ்ட் 30 இல் ஈரானிய ஜனாதிபதியும், பிரதமரும் கொல்லப்பட்ட போது அல்லது அதே வருடம் மற்றொரு குண்டு வெடிப்பில் 72 மந்திரிமார்கள கொல்லப்பட்ட போது அமெரிக்கா வாய் மூடி மௌனித்து ஈரானை ஆதரித்தது. **நன்றி- மீள்பார்வை.**

# நீதிக்கு ஒரு போராட்டம்.

உங்களது உடலையும், உடைகளையும் உங்களது ஆன்மாவையும் தூய்மைப்படுத்திக் கொள்ளுங்கள். உங்களை யாரும் பின் தொடர்கிறார்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். இன்னும் சில மணி நேரங்களே நீங்கள் இப்பூவுலகில் வாழப் போகின்றீர்கள். நீங்கள் சுவர்க்கத்தை அண்மிக்கும் போது உலகில் நீதி நிலைநாட்டப்படும். இவைகள் அமெரிக்காவின் மீது தாக்குதல் நடாத்தியே போராளிகளால் விடுக்கப்பட்ட கடைசி நேர அறிவுறுத்தல்களாகும். இவைகளை ஆழமாக நோக்கும் போது மிகப் பெரியதொரு போராட்டத்தின் ஆரம்பமாக இத்தாக்குதல் இருக்கக் கூடுமோ என்று எண்ணத் தோன்றுகிறது. அதாவது இந்த உலகின் நீதி நிலைநாட்டப்படுவதற்கான மிகப் பெரியதொரு போராட்டம் உலகில் தொடங்கிவிட்டது. அமெரிக்கர்களின் பார்வையில் பயங்கரவாதிகளாகக் காணப்படும் இப்போராளிகள் என்னதான் நீதியை சொல்லப்போகிறார்கள் என்பதை நீங்கள் விளங்க வேண்டுமாக இருந்தால் வரலாற்றை பின்னோக்கி நோக்குவது தவிர்க்க முடியாத ஒன்று.

அது 1924 ஆம் ஆண்டு இஸ்லாமிய உம்மாவின் ஆன்மா நடுங்குகிறது. அங்கே "கமால் அத்தாத் துருக்" துருக்கிய பாதைகளில் நடந்தவனாக இப்படிச் சொல்கிறான். இன்றைய தினம் உங்களுக்கு இஸ்லாம் ஹராமாக்கப்படுகிறது. ஐரோப்பாவின் நவீன ஜனநாயகமே உங்கள் கொள்கையாக மாறப்போகிறது. ஆம்! துருக்கியில் பர்தாவுக்கு தடை விதிக்கப்படுகிறது. அரபிய மொழி அங்கு தடைசெய்யப்படுகின்றது. 1400 வருட யூதச் சதி அரங்கேருகிறது. நபியவர்கள் உருவாக்கிய புனித கிலாபத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுகின்றது. முஸ்லிம் சமூகத்தின் தலைமைத்துவம் பறிக்கப்படுகிறது இஸ்லாமிய வாதியின் இதயத் துடிப்பு நின்று விடுமோ என்று அஞ்சிய அன்று இஸ்லாமிய வாதிகள் தங்களுக்குள் அழுது புலம்பிக்கொள்கின்றனர்.

யூத சிந்தனையில் எழுந்த கமியூனிஸம் பல நாடுகளை தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருகின்றது. கிறிஸ்தவம் உலகை ஆள வேண்டும் என நினைத்த அமெரிக்காவுக்கு கிறிஸ்தவ உலகில் பூதாகரமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றிய கம்யூனிசம் ஒரு பெரிய சவாலாகவே தென்படுகிறது. உலகம் இரண்டாகப் பிரிந்து விட்டது. ரஷ்யாவின் தலைமையில் கம்யூனிச அரக்கர்களும் அமெரிக்காவின் தலைமையிலான

முதலாளித்துவ பேய்களும் உலகத் தலைமைக்காக போட்டியிடுகின்றன. இத்தனைக்கும் மத்தியில் சியோனிசம் தன் கனவை மீட்டுக் கொண்டிருக்கிறது. சியோனிசத்தின் தூக்கத்தில் இஸ்ரேல் எனும் கன்னி அடிக்கடி வந்து போகின்றது. முஸ்லிம்களின் நிலங்கள், உடைமைகள் சூறையாடப்படுகின்றன. அமெரிக்க, ரஷ்யா தலைமைகள் அடிக்கடி சந்திக்கின்றன. நாங்கள் எங்களுக்குள் மோதிக் கொண்டாலும் எம் பொது எதிரியாகிய இஸ்லாத்தை மீள எழும்ப மட்டும் இடம் விடக் கூடாது. அப்போது ஒரு யூதன் இப்படிச் சொன்னான். "நீங்கள் முஸ்லிம் நாடுகளுக்குள் எங்கள் கருத்துக்களை சம அளவில் திணிப்பதில் உடன்பாடு காண்போம" கம்யூனிஸ யூதன் இப்படிக்கூறும் போது முதலாளித்துவ யூதன் இப்படிச் சொன்னான். "நாங்களோ, நீங்களோ அந்த முஸ்லிம்கள் எங்கள் கட்டுப்பாட்டிற்குள் இருந்தாற் போதும் எப்படியோ யூதர்களாகிய நாங்கள் தான் உலகின் போக்கை தீர்மானிக்க வேண்டும"

அது ஒரு பாரிய விருட்சம் அங்கே ஆறு மனிதர்கள் அங்கே தாடியும், ஜூப்பாவும் அணிந்த மெல்லிய தலைவர் போனதும் – இப்படிச் சொல்கிறார். நாங்கள் ஒரு இஸ்லாமிய இயக்கத்தை ஆரம்பிக்க வேண்டும். இழந்து போன கிலாபத்தை மீண்டும் உயிர்ப்பிக்க வேண்டும். கிலாபத் என்பதே உலக நீதிக்கும் சமாதானத்துக்கும் உள்ள போராட்டமாகும். முதலாளித்துவம் எனும் பெயரில் அமெரிக்கா உலகின் சொத்துக்களை ஏப்பமிடுகின்றது. கம்யூனிசம் என்னும் பெயரில் ரஷ்யா மதங்களை சீரழிக்கின்றது. எமது ஆன்மாவையும், எமது நிலங்களையும் சிதறடித்த அந்த கொலைகார கும்பலுக்கு எதிராக பாரியதொரு விடுதலைப் போர் வெடிக்க வேண்டும்".அந்த உபதேசத்தை முடித்துக்கொண்டு மரத்தடியிலிருந்து செல்லும் போது அவருக்கு ஆசி கூறுவது போல் அம்மரத்திலிருந்நு பூக்கள் விழுகின்றன.

மரத்திற்கு கீழ் நின்ற தலைவர் மண்ணுக்குள் சென்றுவிட்டார் அவரது தோழர்களே சிறைக்குள் சென்றுவிட்டனர். முஸ்லிம் ஆன்மா மீண்டும் ஒரு தடவை அழுகிறது. அமெரிக்காவோ ஒரு சாதனை படைத்த களிப்பில் ஒரு பெரு மூச்சு விடுகின்றது. தற்போது முஸ்லிம்கள்தமது எதிரிகளை இனங்கண்டுவிட்டனர்.சிலர் சிந்தனை ரீதியாக எதிர்க்க வேண்டும் என்றனர். சிலர் ஆயுத ரீதியாக எதிர்க்க வேண்டும் என்றனர். ஆனால் இரண்டு சக்திகளும் வளர்கின்றன. மிதவாதச் சக்திகள் அரபு நாட்டின் பொம்மை ஆட்சியாளர்களுக்குச் சவால் விடுக்கின்றனர். ஆயுத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்திகள் அமெரிக்கா, ரஸ்யா வல்லாதிக்கத்துக்கு எதிரான தாக்குதலைத் தொடங்குகின்றன. அங்கே ஒரு புதிய சக்தி வளர்கின்றது. அதுதான் யூதர்களால் ஒழிக்கப்பட்டதாக நினைத்த இஸ்லாம்.

1967 ம் ஆண்டு முஸ்லிம் உலகு மீள உலுக்கிவிட ப்படுகின்றது. ஆம்! முஸ்லிம்களின் 3 ஆவது புனிதஸ்தலமாகிய "மஸ்ஜிதுல் அக்ஸா" யூத இஸ்ரவேளர்களால் தீயிடப்படுவதன் மூலம் வரலாற்றில் மிகப் பெரிய அநியாயம் அரங்கேறுகிறது. அமெரிக்காவுக்கோ உள்ளூர மகிழ்ச்சி.

புவி மாதாவின் பயணத்தின் போது ஆப்கானிய மண் சிந்தனைகளால் சூறையாடப்படுகின்றது. அந்த புதிய சக்தி கம்யூனிசத்தை என்ற சக்தி நேருக்கு நேர் சந்திக்கின்றது. "சத்தியம் வந்தது அசத்தியம் ஒழிந்தது" என்ற என அல்குர்ஆன் கூறுவது கம்யூனிச ஆப்கானிய முஜாஹிதுகளிடம் சரணடைகின்றது. ஆம்! ரஸ்யா 12 துண்டுகளாக உடைந்து சுதந்திரமைடைகின்றன.

அமெரிக்காவுக்கு இப்போதெல்லாம் உள்ள ஒரே ஒரு எதிரிதான் அது நீதியையும்,நியாயத்தையும் நிலைநாட்ட துடிக்கும் சக்தி இஸ்லாம் தான். அந்த சக்தியை வளராது தடுப்பதற்காக ஈராக்கிலும், பலஸ்தீனத்திலும் மட்டுமல்ல உலகெல்லாம் முஸ்லிம்கள் சூறையாடப்படுகின்றது. அமெரிக்காவின் கொடுமைகளை தாங்காது பதிளலித்த முஸ்லிம் ,ஏனைய பெண்களினதும், சிறுவர்களினதும் கண்ணீர் ஒன்று சேர்க்கப்படுமானால் அமெரிக்கா கண்டமே அதற்குள் அழிந்து விடும்.

செப்டம்பர் 11 ம் திகதி 2001 ஆம் ஆண்டு உலக மக்களின் ஆன்மாவிலும் குத்தி விட்ட அமெரிக்கா துடிதுடிக்கிறது. ஆம்! அவர்களுடைய மண்ணில்ஒரு பாரிய தாக்குதல் நிகழ்கின்றது. அவர்களது சர்வதேச பொலிஸ்காரத் தனம் குழிதோண்டிப் புதைக்கப்படுகிறது. அவர்களது முக்கிய இடங்களிலெல்லாம் பற்றி எறிக்கின்றன. அப்போது வானொலியில் இப்படி ஒரு பாட்டு ஒளிபரப்பப்படுகின்றது.




நீதிக்கு இது ஒரு போராட்டம் நிச்சயம் இதை உலகு பாராட்டும். அமெரிக்கா பொதுமக்கள் கொல்லப்படாவிட்டால் இத்தாக்குதல் எந்த சக்தியும் எதிர்த்திருக்கமாட்டார்கள். அமெரிக்கர்கள் ஒன்றை புரிந்துவிட்டனர், அமெரிக்காவுக்கு எதிராக நிலத் தொடர்புபட்ட ஒரு அரசாங்கம் நடக்கிறது. அந்த அரசின் தலைவர் "ஒஸாமா பின் லேடன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எப்போது பலஸ்தீனத்துக்கு அமைதி வருமோ, அப்போது தான் அமெரிக்காவுக்கும் அமைதி கிடைக்கும்" (ஒஸாமா பின் லாடன்)

இப்போராட்டம் தொடர்பாக உங்கள் கருத்துக்கள், தகவல்களை தெரிவிக்க விரும்பின். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.


Rifkan Rizvi
173/15, Nowfer Mawatha,
China Fort,
Beruwala.
Tel :- 034-77660




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்கள் சொற்பமான போர்த் தளபாடங்களை கொண்டிருந்தாலும் சரி, நிறையப் போர்த் தளபாடங்களை கொண்டிருந்தாலும் சரி, நீங்கள் புறப்பட்டு உங்கள் பொருட்களையும், உயிர்களையும் கொண்டு அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாத் செய்யுங்கள். நீங்கள் அறிந்தவர்களாக இருந்தால், இதுவே உங்களுக்கு மிகவும் நல்லது"

(ஸூரா தௌபா - 41 ம் வசனம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org